**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 129/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-5/PW- 5 | Village: | |
| Name | : சாமிநாதன் | Age | :73 |
| Father's/Husband's Name | : அம்மாசி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06/10/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**4 ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது நரசிங்கன்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் எனது ஊரில் ஒருநாள் டீ வாங்க சென்றபோது போலிசார் வந்து கையொப்பம் கேட்டார்கள். நானும் போட்டு கொடுத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசரில் உள்ள** இரண்டாவது**சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 09/09/2020 ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் அருகே நானும் காந்திமதி என்பவரும் இருந்தபோது, திருநீலக்குடி போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து, எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 129/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-4/PW- 4 | Village: | |
| Name | : காந்திமதி | Age | :48 |
| Father's/Husband's Name | : ஜோதிவேல் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06/10/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**4 ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது நரசிங்கன்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 3 அல்லது 4 வருடங்களுக்கு முன்பு நரசிங்கன்பேட்டையில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு சென்றிருந்தோம். அப்போது போலிசார் வந்து கையொப்பம் கேட்டார்கள். நானும் போட்டு கொடுத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 09/09/2020 ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் அருகே நானும் சாமிநாதன் என்பவரும் இருந்தபோது, திருநீலக்குடி போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து, எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**